இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 323 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 18 – திங்கள்கிழமை 03 ஜூலை 2023 – சென்னை 10 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 323 : Thiruvalluvar Year - 2054 - Aani 18 - Monday 03 July 2023 - Chennai 10+8 Pages ₹ 5.00

## தமிழ் எப்போதும் எங்கும் வாழவைக்கும்! தொன்மையான வரலாற்றை நிலைநாட்டிவரும்

# சீர்மிகு தமிழ்நாட்டின் சிறப்பறிய வாரீர்!

## வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை நடத்திய மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரையில் அழைப்பு !

**சென்னை, ஜூலை 3-**

**வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை நடத்திய மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காணொலி மூலமாக உரை யாற்றினார். அப்போது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ் எப்போதும் எங்கும் வாழவைக்கும் என்றும், தொன்மையான வர லாற்றை நிலைநாட்டிவரும் சீர்மிகு தமிழ்நாட டின் சிறப்பறிய வாரீர் என்றும் அழைப்பு விடுத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (02.07.2023) வட அமெ ரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை மாநாட்டில் (FeTNA) காணொலி வாயிலாகக் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை யின் தலைவர் முனைவர் பாலா சுவாமி நாதன் அவர்களே!

செயலாளர் கிங்ஸ்லி சாமுவேல் அவர்களே!

36வது பேரவை விழாவினுடைய ஒருங் கிணைப்பாளர் ஜான்பிரிட்டோ அவர்களே!

இணை ஒருங்கிணைப்பாளர் திருமதி. மலர்மகள் அகிலன் அவர்களே!

எனதருமை நண்பர் ராம்பிரசாத் அவர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர் களின் அமெரிக்கவாழ் உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவை யும் - சாக்ரமெண்டோ தமிழ்மன்றமும் இணைந்து நடத்தும் தமிழ் விழாவில் காணொலி மூலமாக கலந்துகொண்டு உங் களைச் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### திராவிட மாடல் நல்லாட்சியின் மீது நம்பிக்கை கொண்டு எனக்கு உரையாற்ற வாய்ப்பு!

தாய்த் தமிழ்நாட்டின்மீது பற்றும் திராவிட மாடல் நல்லாட்சியின் மீது நம்பிக்கையும் கொண்டு எனக்கு இந்த விழாவில் பங்கேற்று உரையாற்ற வாய்ப்பளித்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித் துக் கொள்ள விரும்புகிறேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (02.07.2023) வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை மாநாட்டில் (FeTNA) காணொலி வாயிலாக கலந்துகொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் முனைவர் பாலாசுவாமிநாதன், செயலாளர் கிங்ஸ்லி சாமுவேல், ஒருங்கிணைப்பாளர் ஜான்பிரிட்டோ, இணை ஒருங்கிணைப்பாளர் திருமதி. மலர்மகள் அகிலன், ராம்பிரசாத் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

09.01.2023 அன்று நடந்த “உல கத்தமிழ்புத்தொழில்முதலீட்டாளர்கள்” மாநாட்டினை நீங்கள் நடத்தியபோது அதிலும் காணொலி மூலமாக கலந்து கொண்டு நான் உரையாற்றினேன்.

பெட்னா (FeTNA) அமைப்புடன் இணைந்து தமிழ்நாடு அரசின் MSME துறையின் கீழ் இயங்கக் கூடிய டான்சிம் (TANSIM) நிறுவனம் அந்த மாநாட்டை நடத்தியது. உல கெங்கும் வாழும் முதலீடு செய்யும் சக்தி படைத்த தமிழர்கள் நம் தமிழ் நாட்டில் செயல்படும் புத்தொழில் நிறு வனங்களில் முதலீடு செய்யும் வாய்ப்பு மட்டு மல்லாது; அவர்களுக்கு வழிகாட்டியாக செயல்பட வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது.

இந்த முன்னெடுப்பின் முதல்கட்டமாக “அமெரிக்கத் தமிழ் நிதியம்” என்ற அமெரிக்க வாழ் தமிழர்களால் தொடங்கப்பட்ட அமைப்பு மூலமாக 10 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ் நாட்டின் தொடக்க நிலை புத்தொழில் நிறுவ னங்களுக்கான முதலீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

**இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்வதில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் ஆராய்ச்சிகளை தமிழ்நாடு அரசு முன்னெடுக்கும். இந்தியா விலேயே, அதிகப்படியான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். அதிலும், வைகையைச் சுற்றித்தான். தமிழர் களின் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கவும், அதை உலகளவில் கொண்டு செல்லவும் அரசு திட்டமிட்டுள்ளது.**

### கூடி உழைக்கும் அமைப்பாகத் திகழும் ஃபெட்னா அமைப்பு!

தமிழ்நாட்டின் புதுயுக தொழில் முனைவுகளில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் பங்குபெற அது ஊக்கமளிப் பதாக அமைந்தது. அந்த வகையில் ஃபெட்னா அமைப்பானது கூடிக் கலை யும் அமைப்பாக இல்லாமல், கூடி உழைக்கும் அமைப்பாகச் செயல்பட்டு வருவதை அனைவரும் அறிவோம்.

இத்தகைய ஃபெட்னா அமைப்பும், சாக்ரமெண்டோ தமிழ்மன்றமும் இணைந்து நடத்தும் தமிழ் விழாவுக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவ ருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக ளைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

### உலகத் தமிழ்ச் சங்கமமாக இந்த மாநாடு நடைபெறுகிறது!

அமெரிக்கவாழ் தமிழர்கள் மட்டுமல்ல - பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களும் அங்கு கூடியிருக்கிறீர்கள். ஏன், தமிழ்நாட் டில் இருந்தும் ஏராளமானவர்கள் அங்கு வந் திருப்பதாக நான் அறிகிறேன். அந்த வகை யில், உலகத் தமிழ்ச் சங்கமமாக இந்த மாநாடு அமைந்திருக்கிறது.

**இது தமிழ் விழா!**

**தமிழ் எப்போதும் வாழவே வைக்கும்!**

**வாழ வைத்துக்கொண்டு இருக்கிறது.**

**தமிழுக்கும் அமுதென்றுபேர்**
**அந்தத் தமிழ் இன்பத்தமிழ்**
**எங்கள் உயிருக்கு நேர்!**
**தமிழுக்கு நிலவென்று பேர்!**
**இன்பத் தமிழ் எங்கள் சமூகத்தின்**
**விளைவுக்கு நீர்!**
**தமிழுக்கு மணமென்று பேர்!**
**இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு**
**நிருமித்த ஊர்!**
**தமிழ் எங்கள் இளமைக்குப் பால்**
**இன்பத் தமிழ் நல்ல புகழ்மிக்க**
**புலவர்க்கு வேல்! -**

**என்று புரட்சிக் கவிஞர் பாடினார்.**

### மொழியின் பெயரை தனது பெயராக வைத்த முன்னோடி இனம்!

தமிழ் என்பது நமக்கு மொழியாக மட்டு மல்ல. அமுதமாக. உயிராக நம்மை வாழ் விக்கும் மண்ணாக, இனிமை தரும் மண மாக, இளமைக்கு மருந்தாக, போராட்டக் களத்துக்கு வாளாக இருக்கிறது. அதனால் தான் தமிழ் என்றால் நாம் உணர்ச்சி வசப் படுகிறோம். இனமான உணர்ச்சி அடை கிறோம். மொழியின் பெயரை தனது பெயராக வைத்துக் கொள்வதில் முன்னோடி இனம் நாம்தான்.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

---

பண்ணைப்பசுமை கடைகளில் தற்போது ரூ.60க்கு தக்காளி விற்பனை!

## தக்காளி விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் இன்று ஆலோசனை!

சென்னை, ஜூலை 3-

வரத்து குறைந்ததால் வரலாறு காணாத வகையில் தக்காளி விலை நூறு ரூபாயை தாண்டியுள்ள நிலை யில் தக்காளி விலையை கட்டுப்படுத்துவதற் கான நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டுற வுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப் பன் இன்று (3.7.2023) அவசர ஆலோசனை நடத்துகிறார்.

தக்காளி வரத்து குறைந்ததால் அதன் விலை படிப்படியாக உயர்ந்து தற்போது 130 ரூபாய் வரை விற்ப னையாகிறது. இத னால் ஏழை, எளிய மக் கள் பாதிக்கப்படாமல் இருக்க பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் ஒரு கிலோ தக்காளி 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்டு வருகிறது. மேலும் தக்காளியை பதுக்கி வைப்பவர்கள் மீது கடு மையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் தக் காளி விலையை கட் டுப்படுத்துவது குறித் தும் நியாயவிலைக் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி விநியோகம் செய்வது குறித்தும் கூட்டுற வுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் இன்று தலைமைச்செயலகத் தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்து கிறார். ஆலோசனைக் கூட்டத்திற்கு பிறகு அதிகாரப்பூர்வ அறி விப்பு தமிழ்நாடு அர சின் சார்பில் வெளியி டப்படவுள்ளது.

---

அரசியல் சட்டம் தங்களுக்கு அளித்திருக்கும் அதிகாரத்தை அறியாமல்

## ஒன்றிய அரசின் கைப்பாவையாகச் செயல்படுகிறார் ஆளுநர்!

### மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் சாடல்!

புதுடெல்லி, ஜூலை 3-

ஆளுநர்கள் சில வேளைகளில் தங்களை மன்னர்களாக நினைத் துக்கொண்டு விருப் பம் போல் செயல்படு வதாக, ஆர்.என். ரவி குறித்து மூத்த வழக்கறி ஞரும் சமூகசெயற் பாட்டாளருமான பிரசாந்த் பூஷன், கண் டனம் தெரிவித் துள்ளார்.

‘என் கேள்விக்கு என்ன பதில்’ என்ற ஊடக நிகழ்ச்சியில் பங்கேற்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷனிடம், ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்ச ரவையிலிருந்து நீக்குவ தாக அறிவித்தது, பின் னர் அந்த உத்தரவை நிறுத்தி வைப்பதாக தெரிவித்தது குறித்து



கேள்வி எழுப்பப் பட்டது.

அதற்கு பதில் அளித்த பிரசாந்த் பூஷன், ஒன் றிய அரசிடம் தமது விசுவாசத்தை நிரூ பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆளுநர் ஆர்.என். ரவி, தன்னிச் சையாக இந்த நடவ டிக்கையை எடுத்திருப் பதாக கூறினார். அமைச்சரவையில் யாரை சேர்க்க வேண் டும். யார் இடம்பெற வேண்டும் என்பது முதலமைச்சரின் விருப் பம் என்றும் இதில் ஆளுநருக்கு எந்த அதி காரமும் இல்லை என் றும் அவர் அரசின் அறி வுறுத்தல்படிதான் செயல்பட முடியும் என்றும் பிரசாந்த் பூஷன் தெரிவித்தார்.

பல வேளைகளில் அரசமைப்புச் சட்டம் தங்களுக்கு கொடுத்தி ருக்கும் அதிகாரம் என்ன என்பதே ஆளு நர்களுக்கு தெரி வதில்லை என்றும் ஒன் றிய அரசின் கைப் பாவையாகவே அவர் கள் மாறி விடுகிறார்கள் என்றும் கூறிய மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், சில சமயங்க ளில் ஆளுநர்கள் தங் களை மன்னர்களா கவே நினைத்துக் கொண்டு விருப்பம் போல் செயல்படுவ தாக குற்றம்சாட்டி னார்.

---



## தமிழினத் தலைவர்
## கலைஞர் நூற்றாண்டு
## சிறப்பிதழ்
## இன்று (03.07.2023)
## ‘முரசொலி’யுடன்
## 8-பக்கம் இணைப்பு!